திரு. எஸ். முருகையன் : சென்ற ஆண்டு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் கையாண்ட முறையிலே அதிகப்படியான மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு தான் இடம் கொடுத்திருக்கிறார்கள். குறைந்த மதிப்பெண்களைப் பெற்ற வர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. கல்லூரிகளிலும் அவர்களுக்கு இடம் இல்லை, இல்லை என்கிறார்கள். ஆசிரியர் பயிற்சி பள்ளிகளிலும் அவர்களுக்கு இடம் இல்லை என்கிறார்கள். எனவே குறைந்த மதிப்பெண்கள் பெற்றவர் களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீதம் நிர்ணயித்து அந்த அளவிற்கு ஒதுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, குறைந்த மதிப்பெண் வாங்கியவர்களுக்கு இடம் கொடுத்தால் அதிக மதிப்பெண்கள் வாங்கியவர்கள் எங்களுக்கில்லாமல் குறைந்த மதிப்பெண்கள் பெற்றிருப்பவர் களுக்குக் கொடுப்பது நியாயம் ஆகாது என்று வாதாடுவார்கள். பல்வேறு காரணங்களைக் கவனித்து தகுதி, திறமை, உடைமை, ஏழ்மை இவற்றைக் கணக்கில் எடுத்துத்தான்—தேர்வுக் குழு அமைக்கப்பட்டு இருக்கிறது--- அந்தக் குழு தேர்ந்தெடுக்கிறது. நியாயத்தை வலியுறுத்துகின்ற முறையில் தான் நாம் நடத்திக்கொண்டு வருகிறோம்.

மேட்டூர் வேளாண்மைப் பள்ளி

*416 வினா—**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மேட்டூரில் உள்ள வேளாண்மை பள்ளியில் படிக்கும் மாணவர் களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

(இ) ஆம் எனில், எத்தனை பேர் அதிகப்படுத்துவதாக உத்தேசம்?

(உ) இந்த பள்ளியில் சேருவதற்கு வேண்டிய தகுதிகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இவ் வினாவுக்கு இடமில்லை.

(உ) (1) மாணவர்கள் 18 முதல் 30 வயதிற்குட்பட்டும், உழவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

(2) மூன்றும் படிவம் அல்லது 8-ம் வகுப்பு தேறியிருக்க வேண்டும்.

(3) உழவுத் தொழிலில் குறைந்தது இரண்டு ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(4) சொந்த நிலங்களில் அல்லது வேளாண்மைப் பண்ணைகளில் வேலை செய்திருக்க வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்தப் பயிற்சிப் பள்ளிகளிலே பயிற்சி பெறும் மாணவர்களுக்கு அவர்கள் சுயேச்சையாக விவசாயம் செய்வதற் கான வசதிகள் செய்து கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: பயிற்சி பெற்ற பிறகு அவர்களுக்குத் தனியாகச் சில பண்ணைகளிலே வேலை கொடுக்க வேண்டுமென்று அரசாங்கமே வேலைக்கமர்த்துவதில்லை. பொதுவாக அவர்கள் உழவுத் தொழிலில் ஈடுபடும்பொழுது எந்த விதமாக உரம்போட வேண்டும், பூச்சி மருந்து எப்படித் தெளிக்கப்பட வேண்டும், எப்படித் தண்ணீர் பாய்ச்சலாம் என்பதுபற்றி முறையாகக் கற்பிக்கப்படுவதால் உழவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், நிலம் சொந்தமாக வைத்திருக்கிறவர்களும் பெற்ற பயிற்சியை நல்ல முறையிலே தாங்களே பயன்படுத்திக் கொள்கிறார்கள். எனவே அவர்களை வேலைக்கமர்த்த வேண்டியதில்லை. தனியாகப் பயிற்சி பெற்றவர்களை அரசாங்கப் பண்ணைகளிலே அமர்த்த முயற்சிக்கலாம்.

திரு. இல. பலராமன்: இந்தப் பயிற்சி எத்தனை மாதங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இந்தப் பயிற்சிக் காலத்தை விரிவுபடுத்தவேண்டும் என்று அந்தப் பகுதியிலேலிருந்து விண்ணப்பம் வந்ததா? இந்தப் பயிற்சிப் பள்ளிகள் மாநில அளவிலே எத்தனை இருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இது மாவட்டத்திற்கொன்றாக 14 பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஒரு ஆண்டுக் காலம் பயிற்சியளிக்கப்படுகிறது. மாணவர்களைத் தேர்ந்தெடுக்கப்படுவது பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசரும், டிஸ்ட்ரிக்ட் அக்ரிகல்சர் ஆபீசரும், இயக்குநர் ஒப்புதலைப்பெற்ற அக்ரிகல்சர் கெஜட்டட் ஆபீசரும் தேர்ந்து எடுக்கிறார்கள். அவர்களுக்கு 35 ரூபாய் உதவிப் பணமும், 5 ரூபாய் மேல்செலவிற்காகவும் கொடுக்கப்படுகிறது. ஒரு ஆண்டுக் காலம் பயிற்சி கொடுக்கப்பட்ட பிறகு அவர்கள் வேறு பல வேலைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். இந்தப் பயிற்சியை இன்னும் நீடிப்பதாக இல்லை. ஒரு ஆண்டுகாலத்திற்குத்தான் இப்பொழுது பயிற்சியளிக்கப்படுகிறது. நீட்டிக்கவேண்டுமென்று எந்த விதமான விண்ணப்பமும் எனக்கு வரவில்லை. அதிகாரிகள் மட்டத்தில் ஒரு வேளை இருக்கலாம் அல்லது வராமலேகூட இருக்கலாம்.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: வருங்கால சந்ததியினரை இந்த வேளாண்மைத் துறையில் ஊக்குவிக்கும்பொருட்டு, மாவட்டங்கள்தோறும் நடத்தி வரும் பள்ளிகளில் தற்பொழுது இருபது பேர்கள்தான் சேர்க்கப்படுகிறார்கள், அதை அதிகப்படுத்தி குறைந்தது நூறு மாணவர்களையாவது சேர்ப்பதற்கு இந்த அரசாங்கம் முற்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்போது அப்படிப்பட்ட ஆலோசனை எதுவும் இல்லை. வருங்காலத்தில் யோசிக்கலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: இந்த மாதிரிப் பள்ளிகள் எந்தெந்த மாவட்டங்களில் நடைபெறுகின்றன. எந்த மாவட்டத்திலாவது நடக்கிற எந்தப் பள்ளியையாவது அமைச்சர் அவர்கள் சென்று பார்வையிட்டுள்ளார்களா? அப்படி சென்று அவர்கள் ஏதாவது ஸஜஷன்ஸ் கொடுத்திருக்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: எல்லா மாவட்டங்களிலும் நடைபெறுகின்றன. வட ஆர்க்காடு மாவட்டத்தில் காட்பாடியில் இந்தப் பள்ளி இருக்கிறது. அமைச்சர் அவர்கள் போய் பார்வையிட்டி

ருக்கிறார்களா என்று கேட்கிற நேரத்தில் உறுப்பினர் அவர்கள் எந்தப் பள்ளியையும் சென்று பார்க்கவில்லை என்று கருதுகிறேன். முதலில் உறுப்பினர் அவர்கள் காட்பாடிக்குப் போய் பார்த்த பிறகு எப்படி அது இயங்குகிறது என்று சொல்லலாம். நானும் வாய்ப்புகள் கிடைக்கும்போது அவைகளைப் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன்.

நன்னிலத்தில் மாணவியர்களுக்கு அரசு விடுதி

*417 வினா—திரு. பி. ஜயராஜ்: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் ஜில்லா, நன்னிலத்தில் சர்க்காரால் மாணவியர் விடுதி ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் என்றால், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: 1970-71-ல் புதிதாக துவக்கப்பட இருக்கிற 22 மாணவியர் விடுதிகள் எந்தெந்த இடங்களில் ஏற்படுத்தப்பட இருக்கின்றன? இதற்கு முன்னால் அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறபடி மாயூரம் தொகுதியில் மணல்மேட்டிலும் ஒன்று அமைக்கப்படவிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: விடுதிகள், எந்தெந்தப் பள்ளிகளில் எவ்வளவு மாணவியர் இருக்கிறார்கள், அவர்களில் எவ்வளவு பேர்கள் ஐந்து மைல்களுக்கு அப்பாலிருந்து வருகிறார்கள், அவர்களின் எண்ணிக்கை என்ன, ஒரு விடுதியைத் துவக்குகிற அளவிற்கு மாணவியர்கள் இருக்கிறார்களா, என்று இவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து மாவட்ட நல அதிகாரி அவர்கள் அரசாங்கத்திற்கு செயற்குறிப்பு அனுப்பவேண்டும். மேற்சொன்னபடி எல்லாம் இருக்குமானால் நிச்சயமாக அந்த இடத்தில் ஒரு விடுதி துவங்கப்படும். அந்த வகையில் அரசாங்கத்திற்கு மாவட்ட நல அதிகாரிகளிடம் இருந்து வந்திருக்கிற செயற்குறிப்புகளை எல்லாம் அரசாங்கம் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது. மணல்மேட்டில் அப்படிப்பட்ட சாத்தியக்கூறுகள் இருந்து அவசியம் என்று மாவட்ட நல அதிகாரி அரசாங்கத்திற்கு செயற்குறிப்பு அனுப்பியிருப்பார்களேயானால் நிச்சயமாக அதை இந்த வருடம் எடுத்துக் கொள்ள முடியும்.

கேளிக்கை வரி

*418 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு உணவு, வாணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சினிமா தியேட்டர்களில் கேளிக்கை வரி ஏய்ப்பு இருக்கிறதா என்று கண்டுபிடிக்க கூடுதலாக சிப்பந்திகளை நியமிக்க அரசு அனுமதி வழங்கியதா?

(இ) ஆம் என்றால், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.